# தினசரி வழிபாட்டு முறை



# 5. ஸ்ரீ ஞானானந்தர் திருப்பள்ளியெழுச்சி

குருமொழி கொண்டு நன்னெறி நின்ற பக்தர்தம்
உத்தம உள்ளக் கமலங்கள் மலரவும்
இருள்வழி சென்றுளம் அலமந்து நிற்குமில்
விருதில் மாந்தரின் மரு ளெல்லாம் மாறவும்
பொருளீட்டும் வெறி நீங்கி பூதலத்தோ ரெல்லாம்
பூரண இன்பம் பெறும்வழி எய்தவும்
அருள்தேடும் அன்பரைக் காக்கும் ஞானானந்தப்
பரம்பொருளே பள்ளி யெழுந்தருளாயே 1

அன்னையின் மிக்கநின் அன்பினைக் காணவும்
மின்னும்நின் பொன்முகம் கண்டு களிக்கவும்
பின்னும்நின் தாமரைத் தாள்களில் வீழ்ந்துநின்
புன் முறுவல் தனைக் கண்டுளம் பொங்கவும்
இன்னல்கள் நீக்கும்நின் தண்ணளிப் பார்வையும்
இன்சொலும் பெற்றவர் தன்னை மறக்கவும்
முன்னியத் தவம் செய்தோர் வந்து நின்றார் ஞான
மன்னவனே பள்ளியெழுந்தரு ளாயே 2

பூமாலை கொண்டுநற் புண்ணியர் வந்துனை
வாழ்த்தி வணங்கிடக் காத்து நிற்கின்றார்
பாமாலை கொண்டுனைப் போற்றும் பக்தரெல்லாம்
பாடிப் பரவசமாகி நின்றார் உந்தன்
நாமாவை நாவார நாளும் பாடும் இவர்
நோக்கம் உந்தன் கடக்கண்ணோக்கம் இந்நோக்கம்
ஆமாறருள் செய்ய அமல ஞானானந்தக்
கோமானே பள்ளியெழுந்தரு ளாயே 3

வடமொழி வேதத்தின் வாழ்த்தொலி கேட்கவும்
குடமுனி கீதங்கள் மடந்தையர் பாடவும்
உடனிருந் துறுபணி உவகையோ டியற்றிட
உம்பரும் வந்து நும் மருங்கினில் நின்றார்
மிடியினை நீக்கி பவப்பிணி போக்கிடும்
தெய்வத் தபோவனத் தமர்ந்த ஞானானந்த
வடிவினில் அடியரை வாழ வைக்க வந்த
வள்ளலே பள்ளியெழுந்தரு ளாயே 4

முற்றும் துறந்த முனிவ்ரும் கைதொழக்
கற்றவர் கண்டு வியந்து மகிழ்ந்திடக்
குற்றேவல் செய்யக் குவலயத் தோரன்றி
மற்றுலகத் தோரும் வந்து நிற்கின்றார்
குற்றம் செய்தோர் உந்தன் பொற்கழலுற்றவர்
குற்றம் நீங்கி நலம் பெற்றவர் உய்ந்திட
நற்றவத் தோரெல்லாம் நாடும் ஞானானந்தக்
கொற்றவனே பள்ளியெழுந்தரு ளாயே 5